2. தகவல் கோரல்.

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி விவாதிக்க 19—4—1990 ஆம் நாளன்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அ.இ.அ.தி.மு.க.வினரின் புகைப்படங்கள் பத்திரிகை களில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறித்து,

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நீர் பங்கீடு தொடர்பாக 19—4—1990ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டிய சர்வ கட்சிக் கூட்டத்தில் பிரதான எதிர்க்கட்சியாக இயங்கும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார் பாக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் கலந்து கொண்டார்கள். தொலைக்காட்சியில் இந்தச் செய்தி ஒளிபரப்பப்பட்டது. ஆனால் பத்திரிகைகளில் அவரது படம் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் தலையாயப் பிரச்சினை யாக உள்ள காவிரி நீர்ப் பிரச்சினையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கலந்து கொள்ளாதது போன்ற கருத்தும், தமிழக அரசின் முடிவு தமிழ் மக்களின் ஒட்டு மொத்தமான கருத்து அல்ல என்றும் மக்கள் மத்தியில் எழுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே, இது போன்ற நிகழ்வுகள் தவிர்க்கப்படும் வகையில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கோள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பத்திரிகைகளைப் பொறுத்த விஷயம். இருந்தாலும் கூட நான் நடை பெற்றதைச் சொல்ல விரும்புகிறேன். அன்றையதினம் முதல் நாள் நடைபெற்ற, 19 ஆம் தேதி நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தாமதமாக வந்தார்கள். ஏன் என்றால் அவர்கள் கூடிப்பேசி கலந்து கொள்ளுவதைப் பற்றி ஒரு முடிவு எடுத்து வருவதற்கு தாமதம் ஆகிவிட்டது. அதற்கு முன்பாகவே புகைப்படக்காரர்கள் புகைப்படம் எடுத்து விட்டார்கள். இந்த புகைப்படக்காரர்கள் எப்போதுமே படத்தை எடுத்த உடன் விரைவாக அவர்கள் அங்கிருந்து சென்று விடுவது வழக்கம். ஏன் என்றால் மாலைப் பத்திரிகைகளில் வந்து விடவேண்டும் என்பதற் காக அவர்கள் எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள். அதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வந்த உடன் நான் உடனடியாகச் சென்று புகைப்படக்காரர்களையும், டி.வி.

1990 ஏப்ரல் 21] **[டாக்டர் மு. கருணாநிதி]**

நிலையத்திலிருந்து வந்தவர்களையும் அழைத்து வர நானே சொன்னேன். அவர் வருவதை விட அவர் வந்தார் என்று நிரூபிக்கவேண்டியது எனக்கு ரொம்ப முக்கியம் (சிரிப்பு) அதனால் உடனடியாக டி.வி.-க்காரர்களை அழைத்து வந்து மீண்டும் ஒருமுறை டி.வி. எடுக்கும்படி செய்யச் சொன்னேன். அது டி.வி. யிலே வந்துவிட்டது. ஆனால், புகைப்படம் எடுக்கப்பட்டது இருட்டடிப்புச் செய்யப்படவில்லை. நிச்சயமாக அப்படி நடைபெறவில்லை. இதைப் பெரிதுபடுத்த வேண்டாம். ஏனென்றால் நாம் எல்லோரும் இந்தப் பிரச்சினையிலே ஒன்றாக இருக்கின்றோம். நாளையதினம் மாலையிலேகூட எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் டெல்லிக்குச் செல்ல இருக்கிறார்கள். எல்லா கட்சிகளும், திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், சி.பி.எம்., சி.பி.ஐ., இந்திய ஐக்கிய பொதுவுடமைக் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய சமது பிரிவு ஆகிய எல்லா எம்.பி.-க்களும் நாளை மாலையிலே டெல்லி செல்ல இருக்கி றார்கள். 23 ஆம் தேதி பிரதமரைச் சந்தித்து இந்த முறையீட்டைச் செய்ய இருக்கிறார்கள். இப்படி ஒரு ஒற்றுமையான சூழ்நிலை இருக்கிறது. (குறுக்கீடு) சொல்லி விட்டேன். சமது பிரிவு என்று சொல்லிவிட்டேன். இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய சமது பிரிவு என்று சொன் னேன். நீங்கள் சமர்த்தாகக் கவனிக்கவில்லை. (சிரிப்பு) ஆகவே, எல்லோரும் ஒன்றாக இந்தப் பணியிலே, நம்முடைய கட்சி கருத்துவேறுபாடுகள் அத்தனையும் மறந்துவிட்டு இதிலே ஒன்று கூடி இருக்கிறோம். ஆகவே, வேண்டுமென்றே அது இருட்டடிப்புச் செய்யப்படவில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

10-15 மணி

*திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர் களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் வர தாமதமாகிவிட்டது என்பது உண்மை. ஆனால் நான் வந்ததும் சொன்னேன் ; தாமதத்திற்குரிய காரணம் நாங்கள் காலை 7 மணிக்கே அந்தப் பிரச்சினையிலே பேச ஆரம்பித்து, தலைமைக் கழகத் திலே எங்கள் கட்சியிலே கூடிப்பேசி முடிவு செய்து விட்டு அவசரமாக வரவேண்டிய நிலைமைதான் இருந்தது. ஆனால் முதல்வர் அவர்கள் என்மீது கவனக் குறைவாக இருக்கிற காரணத்தாலே கார் அடிக்கடி பழுதாகிக் கொண்டிருக்கிறது. இத்தோடு நான் ஐந்தாவது காரை வைத்திருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவருக்குக் கொடுத்த கார் பழுதாகிவிட்ட காரணத்தாலேதான் அந்தத் தாமதமே ஏற்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைக்கு என்னுடைய இல்லத் திருமணத்திற்கு வரும்போதுகூட உங்களுடைய கார் பழுதாகிவிட்டது. (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தங்கள் இல்லத் திருமணத்திற்கு அவர் வீட்டிலேயிருந்து நேரடியாக வரவில்லை. கே. கே. நகர் போய் சுற்றிக் கொண்டு வந்த காரணத்தால் பழுதாகிவிட்டது. (சிரிப்பு)

திரு. எஸ். ஆர், இராதா : தலைவர் அவர்களே, காலையிலே வந்துவிட்டேன். வந்து நிகழ்ச்சியைப் பார்த்து விட்டு தலைவர்களெல்லாம் மேடையில் இருந்தார்கள் என்று திரும்பி வந்துவிட்டேன். மறுபடியும் மாலை வரும் பொழுதுதான் இந்த விபத்து ஏற்பட்டது. (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவருக்கு பழுதாகி விட்டது. மற்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் வந்த பஸ் பழுதாகி விட்டதா? (சிரிப்பு) (குறுக்கீடு) மற்ற அ.தி.மு.க. உறுப்பினர்களும்தான் திருமணத்திற்கு வரவில்லையே, ஒரு வேளை அவர்கள் வந்த பஸ் பழுதாகிவிட்டதா ? (சிரிப்பு)

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, பல பேர் வந்திருக்கிறார்கள். முதல் நாளே கூட எங்கள் கட்சியைச் சேர்ந்த டாக்டர் அவர்கள் குடும்பத்தோடு போயிருக்கிறார். பலபேர் போயிருக்கிறார்கள். தலைவரைப் பொறுத்தவரையிலே எங்களிடத்திலே எந்தக் கருத்துவேறுபாடும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரராஜ் அவர்கள் திருமணத்திற்கு வந்திருந்தார், அனைவருடைய சார்பிலும். (சிரிப்பு)

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

இராமேஸ்வரம் கடல் பகுதியில் மீனவர்கள் சிலர் கடத்தப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். ஆர். இராதா, குமரி அனந்தன், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், ஆர். சிங்காரம், எஸ். டி. உகம்சந்த், சோ. அழகர்சாமி, கே. ஆர். இராமசாமி ஆகியோர் '' இராமேஸ்வரம் பகுதியில் மீன்